**கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட் - 2022**
---------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (“தொகுதி”) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயப்பொருளின் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.5 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன். மேலே உள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ள படி கம்பனியின் முகாமையானது கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினுடைய தொடர்ந்து இயங்குவதற்கான திறனை மதிப்பிட்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக திருப்தி அடைந்துள்ளது. மேலும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

எவ்வாறாயினும்,ஹெலன்கோ ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் இயக்குனர் சபை 2015 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் விளைவாக, திட்டத்தினுடைய ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியைக் கலைக்க கம்பனியின் முகாமைத்துவம் முடிவு செய்திருக்கவில்லை. மற்றும் கம்பனியின் முகாமைத்துவமானது முன்னோக்கிச் செல்லும் வழியில் தேவையான வழிகாட்டுதல்களை தொடர்புடைய அமைச்சிடம் இருந்து நாடுகிறது. எனவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

மேலும், சினோலங்கா ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் திகதிய 20/1042/204/050 – I அமைச்சரவை கடிதத்தின் பிரகாரம நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், கம்பனியின் இயக்குனர் சபை 2022 மே 30 இலிருந்து அமுலாக்கும் வகையில் 09 மாதகாலப்பகுதிக்காக கிறான்ட்

கியாட் கொழும்பு செயற்திட்டத்தினைக் குறைப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன் அறிக்கைத்திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக, 2023 மார்ச் 14 ஆந் திகதிய 23/0431/604/046 ஆம் அமைச்சரவைத்தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையானது கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டடால் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டிலும் பேணப்பட்ட பங்குகளை உடனடியாக அமுலாக்கும் வகையில் பொதுதிறைசேரிக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன்

அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்இ

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் இந்தத் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 52 (3) ஆம் பிரிவு | பெறுகைகளை கருத்திற்கொள்ளாமல் 235,294,117 பங்குகள் 8.50 ரூபாவில் விநியோகிக்கப்பட்டு பங்குவழங்கல் கம்பனிப்பதிவாளருடன் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், நிதிக்கூற்றுக்கள் அதற்கிணங்க சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ரூபா 2 பில்லியன் வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் கம்பனிப்பதிவாளரிடம் காணப்பட்ட பதிவேடுகளிற்கிடையில் அவதானிக்கப்பட்டது. | இந்தச் சாதாரண பங்குவழங்கல்களானது ஈபீஎவ் பங்குதாரர்கள் தவிர எஸ்எல்ஜசீயின் அதிமுக்கிய பங்குதாரர்களை உள்ளடக்கி பிரதான பங்குதாரர்களால் 2021 யூன் 10 இன் போது வழங்கப்பட்ட சாதாரண பங்குகளை இரத்துச்செய்வதற்காக வழங்கப்பட்ட வேண்டுதல்களின் பேரில் இரத்துச்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br><br>இந்தச் சாதாரண பங்குவழங்கல்களானது ஈபீஎவ் பங்குதாரர்கள் தவிர எஸ்எல்ஜசீயின் அதிமுக்கிய பங்குதாரர்களை உள்ளடக்கி பிரதான பங்குதாரர்களால் 2021 யூன் 10 இன் போது | கம்பனி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வழங்கப்பட்ட சாதாரண பங்குகளை இரத்துச்செய்வதற்காக வழங்கப்பட்ட வேண்டுதல்களின் பேரில் இரத்துச்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

நிலைமையை சீராக்குவதற்கு திறைசேரியின் செயலாளருடன் இந்த விடயம் முன்னிற்குகொண்டுவரப்பட்டதுடன் ஈபீஎவ் ஆல் ஏற்றுக்கொள்ளாமையால் தீர்க்கப்படாதிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 4,299,299 நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.5,008,966 ஆக காணப்பட்டதால் நிதிசார் விளைவுகளில் ரூபா.9,308,265 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானத்தில் ஏற்பட்ட குறைவே இந்தப்பின்னடைவிற்குக் காரணமாகவிருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம் இ நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் / நட்டம் என்பன பின்வருமாறு.

| ஆண்டு | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| நிதி வருமானம் | 1,627,095 | 16,009,682 | 1,225,668 | 9,435,080 | 25,564,060 |
| நிர்வாக செலவினங்கள் | (7,753,562) | (9,411,210) | (6,540,697) | (9,931,740) | (8,725,269) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | (4,299,299) | 5,008,966 | (4,076,470) | (255,178) | 18,477,650 |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
|---|---|---|---|---|---|
| நிதி வருமானத்தின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | (90)% | 1206% | 87% | (63)% | (33)% |
| நிர்வாக செலவினங்களின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | (18)% | 44% | 34% | 14% | 11% |
| தேறிய இலாபத்தின் வளர்ச்சியின் வீதாசாரம;/ (குறைப்பு) | (186)% | (223)% | 1498% | (101)% | (89)% |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டமானது செயற்பாடுகள் தொடங்கியவுடன் அல்லது செயற்பாடுகள் தொடங்குவதற்கு ஆறு மாதங்களிற்கு முன்னர் தொடங்கப்பட வேண்டுமென்பதால் நிர்மாணக்காலப்பகுதியின் போது கூட்டிணைந்த திட்டம் சாத்தியமற்றது. | கூட்டிணைந்த திட்டம் அதன் மூலோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது நிர்மாணச் செயற்திட்டமாகவிருப்பதால் எந்தவொரு வருடாந்தத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், விரிவான செயற்திட்ட திட்டம் 2021 ஆம் ஆண்டின்போது நிதி அமைச்சிற்கு (தேசிய பெறுகைக் குழுவிற்கு) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டு இயக்குனர் சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தது. | கம்பனி அதனது வருடாந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தை ஆண்டின் தொடக்கத்தில் தயாரித்து, அதற்கான அங்கீகாரத்தைப் பெற்று அமுல்ப்படுத்த வேண்டும். |